Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 56

வெள்ளிக்கிழமை
21 ஜனவரி 2022

தை 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 827
மொத்தம் 5,99,363

**உயிரிழப்பு**
நேற்று 12
மொத்தம் 15,255

# தமிழருக்கு பலம் சேர்ப்பதே இந்தியாவுக்குப் பாதுகாப்பு

## கடன் கொடுத்தாலும் இலங்கை நன்றி பாராட்டாது
## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜனவரி 21

வாங்கிய கடனுக்கான விசுவாசத்துடன் இலங்கை எப்போதும் நடந்துகொண்டதில்லை. பல்வேறு தருணங்களில் துரோகம் செய்த இலங்கை, எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. அதனால் இலங்கைத் தமிழர்களை அரசியல் ரீதியாக வலுப்படுத்தும் செயற்பாடுகளை இந்தியா முன்னெடுக்கவேண்டும்.

15

# எதிர்ப்பு அரசியலால் எதுவுமே நடக்காதாம்

### தமிழ்க் கூட்டமைப்புக்கு சுதந்திரக்கட்சி அறிவுரை

கொழும்பு, ஜன.21
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பு அரசியலால் வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதுவும் நடக்கப்போவதில்லை. அதனால் எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு, அரசால் முன்னெடுக்கப்படும்

15

**முச்சந்தி முரளி**



"பந்து இப்ப மோடியின்ர கையில, இலங்கையை கையுக்க கொண்டுவர, என்ன செய்யப் போறாரெண்டு ஒரு பாப்பம்"

# 'ஐஸ்' வைத்திருந்த இளைஞர் கைது

மன்னார், ஜன.21
ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்

15

# திடீர்த் தீ; 'பார்'நாசம்!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜன.21
வவுனியா, வைரவப்புளியங் குளத்தில் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள மதுபான சாலை விருந்தகத்தில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சுமார் 4 மணிநேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக் குள் கொண்டு

15

# இராமேஸ்வரம் மீனவர் படகை மோதி மூழ்கடித்த கடற்படை!

### தமிழக மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.21
இலங்கைக் கடற்படை மோதியதில் தங்களது படகு ஒன்று மூழ்கியுள்ளது என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
அந்தப் படகில் இருந்த 7 மீனவர்களும், கடலில் மூழ்கிய நிலையில் சக மீனவர்களால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
தமிழகத்தின் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கடலுக்குச் சென்ற மீனவர்கள், கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினர் அவர்களைத் துரத்தினர் என்று கூறப்படுகின்றது.

15

# அத்துமீறிய மீன்பிடியை கண்டித்து ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.21
வடக்குக் கடலில் தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்தக்கோரி இன்று வெள்ளிக்கிழமை காரைநகரில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.
காரைநகர் பிரதேச செயலகம் முன்

15

# சுகாதார உதவியாளராக பணியாற்ற வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சுகாதார உதவியாளர்களாகப் பணியாற்ற தன்னார்வம் கொண்டவர்கள் முன்வர வேண்டும்

11

# எரிந்த நிலையில் மூதாட்டியின் சடலம்

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.21
வல்வெட்டித்துறையில் மூதாட்டி ஒருவரின் சடலம் எரிந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

15

# வீதி விடுவிப்பு என்றுகூறி ஏமாற்றுகிறார் அங்கஜன்!

### வலி.வடக்கு தவிசாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.21
தனியார் காணிகள் ஊடாக அத்துமீறி வீதி அமைக்க முடியாது. உண்மையான வீதியூடாக அதனைச் செய்ய வேண்டும். மக்கள் காணியூடாக வீதி அமைத்துவிட்டு வீதியைத் திறந்து விட்டேன் என

15

# கடை உடைத்து பணம் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜன.21
வட்டுக்கோட்டை, தொல்புரத்தில் பட்டப் பகலில் கடை உடைத்துப்

15

# இன்று ஆரம்பமாகிறது வர்த்தகக் கண்காட்சி!

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ளது. வருடாந்தம் நடத்தப்படும் இந்தக் கண்காட்சி இம்முறை 12ஆவது த

15

# வவுனியாவில் ஆயுதம் மீட்பு

வவுனியா, ஜன.21
வவுனியாவின் இரு வேறு இடங்களில் வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.
ஓமந்தை, நாவற்குளம் காட்டுப் பகுதியில் உள்ளூர்த்

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீட்கவேண்டுமெனில் இனப் பிரச்சினையை தீர்க்குக

*கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு*



**கொழும்பு, ஜன. 21**

**நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென்ற எண்ணம் உண்மையிலேயே ஜனாதிபதியிடம் இருக்குமாக இருந்தால் தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி தனது உரையில் வாக்களித்த மக்களுக்கு மட்டுமன்றி வாக்களிக்காத மக்களுக்கும் பொறுப்புக் கூறும் கடமை தமக்கு உண்டு என்று குறிப்பிட்டிருந்தார். அந்தக் கருத்து அவருக்கு வாக்களித்த சிங்கள மக்கள் பற்றியதா? அல்லது வாக்களிக்காத சிங்கள மக்களைப் பற்றியதா? அல்லது அவருக்கு வாக்களிக்காத தமிழ்த் தேசிய மக்களையும் சேர்த்துதான் கூறினாரா? என்ற கேள்விகள் உள்ளன.

ஆனால், நடவடிக்கைகளை நோக்கும்போது தமிழ் மக்களை அவர் முற்றாக புறக்கணித்துள்ளார் என்பதனைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அவரின் உரையில் நீண்டகாலமாக இருக்கும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வுகளையும் அவர் முன்வைத்திருக்கவில்லை.

தமிழ்மக்கள் கடந்த காலங்களில் அரசியலமைப்பை நிராகரித்து அவர்களின் உரிமைகளுக்காக போராடி வந்தள்ளனர். தமிழ்த் தேசியம், இறைமை, சுயநிர்ணய உரிமை, கூட்டாட்சித்தீர்வு எனக் கோரியே அவர்களின் போராட்டங்கள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்தக் கோரிக்கைகளைக் கைவிடச்செய்யும் நோக்கில் இலங்கை அரசு 80களில் இருந்து நடத்திய இனவழிப்பு போரின் ஒருபகுதியை அரங்கேற்றியதில் ராஜபக்ச அரசுக்கும் அவருக்கும் பெரும் பங்குண்டு. தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்கள், சிங்கள மயமாக்கல்கள் மூலம் நிலம் பறிக்கப்படுகின்றது. இந்த இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் வரையில் கோத்தாபய ராஜபக்ச மட்டுமல்ல புத்தபெருமான் வந்தாலும்கூட இந்த நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது - என்றார். (ம-22)

# இளைஞர்களை வெளியேற்றி கோத்தாபய அரசு சாதனை

*சஜித் சுட்டிக்காட்டு*

இலங்கையிலுள்ள இளைஞர்களை வெளிநாட்டுக்குத் துரத்தியது கோட்டாபய அரசு என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டிலுள்ள பிரச்சினைகள்இப்போதுதீரவில்லை. ஆனால், பயங்கரவாதம், தேசியப் பாதுகாப்பு என்று கூறி இவர்கள் ஆட்சிக்கு வந்தனர்.

இஸ்லாமிய சமூகத்தை இவர்கள் இப்போது துன்புறுத்துகின்றனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு இன்னமும் பதில்கிடைவில்லை. நாட்டில் வாழ முடியாது என்று இங்குள்ள இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் தப்பிச்செல்கின்றனர். இளைஞர்கள் இங்கு இல்லை என்றால் எதிர்காலத்தில் இந்த நாட்டைப் பாதுகாப்பது யார்? வாழும் மக்களிடம் பணம் இல்லை. நாட்டில் டொலர் இல்லை. கொரோனாவைக் காரணம் காட்ட வேண்டாம். உலக நாடுகளும் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளன. ஆனால், அங்குள்ள மக்கள் வரிசையில் நிற்கவில்லை - என்றார். (ஒ-4-22)

# நாட்டின் வளங்களை விற்று நிர்வாகம் முன்னெடுப்பு!

*அநுரகுமார குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜன. 21

ராஜபக்சக்கள் நாட்டின் தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு விற்று, அரச நிர்வாகத்தை முன்னெடுக்கிறார்கள். தேசிய இறையாண்மை, தேசிய பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி பொய்யாக்கப்பட்டுள்ளது. மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள ராஜபக்சக்கள் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தேசிய வளப்பாதுகாப்பு, நாட்டின் சுயாதீனத்தன்மை ஆகியவற்றை குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாக செயற்படுகிறது. நாட்டின் தேசிய வளங்களை முழுமையாக பிற நாட்டவர்களுக்கு தாரைவார்க்கும் கொள்கையை அரசாங்கம் செயற்படுத்துகிறது - என்றார். (ம)

# கோத்தாபயவிடம் இராணுவச் சிந்தனை

*சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு,ஜன.21

தான் இன்னமும் இராணுவச் சிந்தனை வாதத்துக்குள்தான் இருக்கின்றேன். நீதியான, நியாயமான வழியில் செல்வதற்குத் தயாரில்லை என்பதையுமே கொள்கை விளக்க உரையில் வெளிப்படுத்தியுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவின்போது ஜனாதிபதி உரையாற்றியிருந்தார். 2020ஆம் ஆண்டு ஒன்பதாவது நாடாளுமன்றில் முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து கொள்கை விளக்க உரையாற்றினார். 2022ஆம் ஆண்டு 2ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரையாற்றியுள்ளார்.

அன்று முதல் இன்று வரை அவரின் உரைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்தோம். இந்த நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றனர் என்பதையும், தமிழர்கள் என்கிற தேசிய இனத்தின் அடிப்படை அபிலாஷைகளையும் அவர் தூக்கிக் கடாசிவிடும் வகையிலேயே செயற்பட்டுள்ளார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதியின் உரையென்பது, அனைவரையும் அரவணைத்து, ஒன்றிணைக்கும் வகையில் அமையவேண்டும். ஆனால் ஒரு தலைவனின் உரையாக ஜனாதிபதியின் உரை அமையவில்லை. தன்னுடைய இராணுவச் சிந்தனை வாதத்துக்குள், தான் வைத்திருந்த துப்பாக்கி முனைக்குள் மட்டும் தான் தன்னுடைய சிந்தனை இருப்பதாகவே அவரது பேச்சு அமைந்துள்ளது.

நீதியான - நியாயமான வழியில் செல்வதற்குத் தயாரில்லை என்பதைத்தான் அவரது உரை குறிப்பிடு கின்றது. இந்த நாடு சீரான பாதையில் நேர்த்தியாகச் செல்லவேண்டுமானால், இனப்பிரச்சினை தீரவேண்டுமானால், தன்னுடைய மனதை ஜனாதிபதி முதலில் மாற்றிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாட்டின் இறைமையும், மக்களின் வாழ்க்கையும், பொருளாதாரமும் மேம்படும் - என்றார். (ஒ-4-44)

# சு.க.விலிருந்து மைத்திரியை உடனடியாக நீக்கவேண்டும்!

*சந்திரிகா ஆவேசம்*

பெரமுனவின் கூட்டணியில் இணைந்தமைக்காக சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவை உடனடியாக நீக்கவேண்டும் என்று அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாம் உருவாக்கிய சுதந்திரக் கட்சியை மஹிந்த ராஜபக்சவும் மைத்திரிபால சிறிசேனவும் அழித்துவிட்டனர். சுதந்திரக் கட்சி அழிந்துவிடும் என்பதால் பெரமுனவின் கூட்டணியில் இணைய வேண்டாமென இரண்டு வருடங்களாக விடுத்த கோரிக்கையை மைத்திரிபால சிறிசேன செவிசாய்க்கவில்லை. இன்று நாட்டைப் பார்க்கும்போது அழுவதா? சிரிப்பதா? எனத் தெரியாதுள்ளது - என்றார். (ம)

*பிணைமுறிக்கு 500மில். டொலர்*

# கறுப்புப் பணத்தை அரசாங்கம் சட்டபூர்வமானதாக்க முயற்சியா?

*ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி*

கொழும்பு, ஜன. 21

ஒப்பீட்டளவில் மிகவும் சொற்பளவான இலாபத்தைத் தரக்கூடிய பிணைமுறிகளுக்கான கொடுப்பனவாக 500 மில்லியன் டொலர்களை அரசாங்கம் செலுத்தியிருக்கின்றது. இதனூடாக கறுப்புப் பணத்தை சட்டபூர்வ பணமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பால்மா, எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதுடன் எரிபொருள் இல்லாததன் காரணமாக மின்விநியோகம் தடைப்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப்படியான நிலையில், ஒப்பீட்டளவில் மிகவும் சொற்பளவான இலாபத்தைத் தரக்கூடிய பிணைமுறிகளுக்கான கொடுப்பனவாக 500 மில்லியன் டொலர்களை அரசாங்கம் செலுத்தியிருக்கின்றது. இந்தக் கொடுப்பனவு எவருக்குச் செலுத்தப்பட்டிருக்கின்றது என்ற நியாயமான கேள்வி எமக்கு எழுந்துள்ளது. ஏற்கனவே பெருமளவில் கொள்ளையடிக்கப்பட்ட கறுப்புப்பணத்தை இதனூடாக சட்டபூர்வ பணமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படக்கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது - என்றார். (ம)

# சுதந்திர தினத்துக்கு மன்னாரில் ஏற்பாடு

மன்னார்,ஜன.21

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, மன்னாரில் சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றுக் காலத்தில், மட்டுப்படுத்தப்பட்ட பங்கேற்பாளர்களுடன் சுதந்திர தினத்தைக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. சுதந்திரதினத்தன்று, மன்னார் பாலத்தடியிலிருந்து அணிவகுப்பு புறப்பட்டு, மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தைச் சென்றடையும். அங்கு கொடியேற்றத்துடன் இரு மொழிகளிலும் தேசியக் கீதம் பாடப்படும். நான்கு மதத் தலைவர்களின் ஆசியுரையும் இடம்பெறும்.

மரக்கன்றுகளும் நடுகை செய்யப்படும். இதற்கான வெள்ளோட்டத்தை இரு நாள்கள் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரத்துக்குப் பிறகு

# முதல் தடவையாக நாடு வங்குரோத்து!

**1948ஆம் ஆண்டி லிருந்து இந்த நாட்டை பல்வேறு அரசாங்கங்கள் ஆட்சிசெய்துள்ளன. ஆனால், இம்முறைதான் நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. அரசின் செயற்பாடுகள் மிக மோசமாகவுள்ளன.**

இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கட்சியின் சார்பில் இந்தக் கோரிக்கையை எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பை இயற்றும் நடவடிக்கைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது உங்களுக்கும் தெரியும்.

ஆனால், இன்று என்ன நடக்கின்றது? ராஜபக்ச குடும்பத்துக்கு எதிரான வழக்குகளுக்காக வாதாடும் சட்டத்தரணிகள், புதிய அரசமைப்பை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். 20ஆவது திருத்தச்சட்டமும் இவ்வாறுதான் நிறைவேற்றப்பட்டது. இறுதிவரை எமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

புதிய அரசமைப்புக் குறித்து ஜனாதிபதி உரையாற்றினார். புதிய அரசமைப்பை வெளியில் தயாரித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பாமல், அந்தப் பணியை முன்னெடுப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுங்கள்.

ராஜபக்ச குடும்பத்தினருக்கு எதிரான வழக்குகளுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளே, புதிய அரசமைப்பை தயாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு அரசும் அரசமைப்பு விடயத்தில் இவ்வாறு செயற்பட்டதுகிடையாது. எனவே, புதிய அரசமைப்பை இயற்றுவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுங்கள்.

அதேவேளை, 1948ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டை பல்வேறு அரசாங்கங்கள் ஆட்சிசெய்துள்ளன. ஆனால், இம்முறைதான் நாடு வங்குரோத்து அடைந்துள்ளது.- என்றார். (ம-44)

---

அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய

## 800 கொள்கலன்களை விடுவிக்க இணக்கம்!

கொழும்பு, ஜன. 21

அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய 800 கொள்கலன்களை விடுவிக்கத் தேவையான டொலரை வழங்க மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டொலர் நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை துறைமுகத்தில் இருந்து விடுவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு மிகுதியாகவுள்ள கொள்கலன்கள் எதிர்வரும் மாதமளவில் விடுவிக்கப்படும்.

சந்தையில் அரிசி விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை கருத்திற் கொண்டு அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேவையான அரிசி இறக்குமதி செய்யப்பட்டவுடன் சந்தையில் அரிசியின் விலை ஒப்பீட்டளவில் குறைவடையும். அரிசியின் விலை அதிகரிக்கப்படமாட்டது. அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம)



## சரத் வீரசேகரவுக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு,ஜன.21

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

சரத் வீரசேகர சுகவீனம் காரணமாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டார். இதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் தற்போது நாரஹேன்பிட்டி பொலிஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4,இ)

---

## வெளிநாட்டவருடன் திருமணம் விதிகளை கைவிடவேண்டும்!

### மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப் பேராணை மனு

கொழும்பு, ஜன. 21

வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்வதற்கு, இலங்கையர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய விதிகளை கைவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப் பேராணை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்தகைய திருமணத்தில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அறிக்கை பெறப்படவேண்டுமென்ற விதிமுறையைச் சவாலுக்கு உடன்படுத்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகம், பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இலங்கை கையொப்பமிட்ட மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்தில் அங்கீகரிக்கப்பட்ட உரிமையாக, ஒவ்வொரு நபரும் தாம் விரும்பும் எந்தவொரு நபரையும் திருமணம் செய்துகொள்ள சுதந்திரம் இருப்பதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். (ம)




**நல்லூரில நடந்த தைப்பொங்கல் விழாவில கண்டியன் டான்ஸ் ஆடினதால பெரும் அதிருப்தி வந்ததெல்லோ. அப்பிடி அந்தப் பொங்கல் விழாவில நடந்ததுக்கு வடக்கு மாகாண ஆளுநர் இல்லாட்டி நாகவிகாராதிபதிதான் காரணமா இருக்கோணும் எண்டு பரவலாக்கதை அடிபட்டது. ஆனால் உண்மையில ஆளுநருக்கோ, விகாராதிபதிக்கோ இந்தப் பொங்கல் கண்டியன் டான்ஸ் விவகாரத்தில சம்பந்தமில்லையாம். அப்ப ஆர் உதை ஏற்பாடு பண்ணினது? மோகனமான ஒருத்தர்தான் உதுக்கெல்லாம் சூத்திரதாரியாம்.**

**தன்ர இனத்தையும், மொழியையும் விட சிங்கள மொழியிலையும், பௌத்தத்திலையும் விசுவாசம் இருக்கிறமாதிரிகாட்டி, தனக்கு ஏதும் ஆதாயம் பாக்கிறதில இந்த மோகனமானவர் வலு கெட்டிக்காரர். முந்தி ஒரு அமைச்சரின்ர இஞ்சத்தை ஏரியா இணைப்பாளராகவும் இருந்த வர். அப்பிடி பிறப்பால தமிழரா இருந்தா லும், பேரினத்துக்கு அவர் காட்டுற விசுவாசத்தின்ர ஒருபகுதியாத்தான் அண்டைக்கு நல்லூரில கண்டியன் டான்ஸை களமிறக்கியிருக்கிறார் அந்த மோகனமானவர். அவரின்ர இந்த வேலையால, பொங்கல் விழாவை ஏற்பாடு செய்த யாழ். நண்பர்கள் எண்ட அமைப்புக்குள்ளயும் கடும் பிரளயம். 'ஒருத்தருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் எப்பிடி தனியொராள் இப்பிடி ஒரு வேலையைச் செய்து எங்கட அமைப்பின்ர பேரைக் கெடுக்கலாம்?' எண்டு ஒரே அமளியாம். அதால அந்த அமைப்பு இப்ப ஒரு முடிவெடுத்திருக்காம்.**

**'இனிமேல் எங்கட யாழ்.நண்பர்கள் அமைப்பு ஒழுங்கமைக்கிற எந்த நிகழ்ச்சி எண்டாலும், அதில என்னென்ன நிகழ்ச்சியள் நடக்கப் போகுது எண்டு எல்லாருக்கும் தெரியப்படுத்தி அனுமதி எடுக்கோணும். அப்பிடி அனுமதி இல்லாத எந்த நிகழ்ச்சியும் நடத்த ஏலாது' எண்டு அந்த அமைப்பு தன்ர எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தி இருக்கு.**

**இந்த முடிவைக்கேட்டு, மோகனமானவர் அப்செட் ஆகியிருப்பார் எண்டுதானே நினைக்கிறியள். ஆனால் அதுதான் இல்லை. அவர் எதுக்காக உந்தக் கூத்தெல்லாம் ஆடினாரோ அதுக்கு கைமேல பலன் கிடைச்சிருக்காம். இண்டைக்கோ, நாளைக்கோ அவருக்கு ஏதோ ஒரு பதவி குடுபடுகுதாம். அதுக்காக அவர் கொழும்புக்கும் போட்டாராம். காக்கா பிடிக்கிறதுக்கு இப்ப கண்டியன் டான்ஸூம் ஒரு முறையா மாறிட்டு பாருங்கோ...!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பு ஏற்படாதவாறு

# மின் விநியோகத்தை கட்டுப்படுத்துங்கள்

## அமைச்சர் கம்மன்பில ஆலோசனை



கொழும்பு,ஜன.21

பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், மின் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து மின்சார சபை அவதானம் செலுத்த வேண்டுமென்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- கடந்த டிசெம்பர்மாத காலப்பகுதியில் நீர்மின் ஊடாக 60வீத மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதால், மின்சார சபை தமக்கு டீசல் மற்றும் உராய்வு எண்ணெய் பெப்ரவரி மாதமளவில் அவசியப்படும் என்று கடந்தவருடத்தின் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டது.

வறட்சியான காலநிலை ஆரம்பமானதைத் தொடர்ந்து, மின்சார சபை மின் உற்பத்திக்குத் தேவையான டீசல் மற்றும் உராய்வு எண்ணெய் ஆகியவற்றை வழங்குமாறு கடந்த 11ஆம் திகதி கோரியது.

மின்சார சபைக்கு ஒரு நாளைக்கு மாத்திரம் ஆயிரத்து 500 மெற்றிக்தொன் டீசல் விநியோகிக்க வேண்டும்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பெற்றோலிய வளங்கள் கூட்டுத்தாபனத்திடம் மின்சார சபைக்கு விநியோகிப்பதற்கான எரிபொருள் கையிருப்பில் இருக்கவில்லை.

எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான டொலரைத் திரட்டிக்கொள்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளவேளை, மின்சார அமைச்சுக்கும் டொலர் திரட்டுவது சிக்கல் நிலைமையை தோற்றுவித்துள்ளது.

மின்சாரசபை பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், மின் விநியோகத்தைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், போக்குவரத்துத் தேவைக்கான எரிபொருளை எம்மால் ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது.

மின்சார சபைக்கு தற்போது 10 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. இது 8 நாள்களுக்கு மாத்திரம் போதுமானதாக அமையும். மின்சார சபை 24 மணித்தியாலங்களும் மின்விநியோகத்தை வழங்கினால், எதிர்வரும் நாள்களில் மீண்டும் மின் உற்பத்திக்கான எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும். எனவே மின்சார அமைச்சு முன்வைத்த திட்டங்களை முறையாகச் செயற்படுத்த வேண்டும் - என்றார். (ஒ-4-இ)

## சுற்றுலாப் பயணிகளுக்கான குமிழி யோசனை ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.21

இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட உயிரியல் பாதுகாப்புக்குமிழி யோசனை தற்போது அவசியமற்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில்;

குமிழி யோசனையை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இருந்தால், பரிந்துரைக்கப்பட்ட கொரோனாப் பரிசோதனை முறைகளுக்குப் புறம்பாக, இலங்கைக்குவரும் சுற்றுலாப் பயணிகள் மட்டுமே அதைச் செய்யவேண்டும் என்றார்.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கு நீரிழிவு நோய் இல்லாதபோது, கொரோனாத் தொற்று நீரிழிவு நோயை உருவாக்கும் போக்கைக் கொண்டுள்ளது என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் உட்சுரப்பியல் வல்லுநர் மணில்க சுமனதிலக தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## 500மில். டொலர் கடன் மீளச் செலுத்தப்பட்டது!

கொழும்பு. ஜன. 21



பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலைமையிலும், தடைகளைத் தாண்டி, 500 மில்லியன் டொலர் பிணைமுறிக் கடனை மீளச் செலுத்தியுள்ளோம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

18ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று செலுத்தப்படவேண்டியிருந்த 500 மில்லியன் டொலர் எங்கிருந்து கிடைக்கப்பெற்றது என்று 19ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

500 மில்லியன் டொலர் பிணைமுறிக் கடனை செலுத்தவேண்டிய நாள்கள் நெருங்கிக் கொண்டிருக்கும்போது அதுதொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. டொலரை இலங்கையில் அச்சிடமுடியாது என்பதை அனைவரும் அறிவர். எனினும் தற்போது நாம் அதனைச் செலுத்தியுள்ளோம். அத்தோடு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயம் மிகவும் சாதகமானதாக அமைந்துள்ளது. நாம் பொருளாதார சுறாவளிக்கு மத்தியிலும் கடனை மீளச்செலுத்த முடிந்தமை மகிழ்ச்சிக்குரியது - என்றார். (ம)

## சுதந்திரதினத்தன்று ரஞ்சன் விடுதலை?

கொழும்பு, ஜன. 21

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் நேற்று முன்தினம் தொலைபேசி உரையாடலொன்று இடம்பெற்றுள்ளது. சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்து, சுகநலம் விசாரிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் வெலிக்கடைசிறைக்கு சென்றிருந்தார். சிறைக்குச் செல்வதற்கு முன்னர், ஜனாதிபதிக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ள சஜித், ரஞ்சன் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். ஜனாதிபதியிடம் இருந்து விரைவில் சாதகமான முடிவு கிடைக்கும் என சஜித் பிரேமதாஸ நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஒ-44)

## இறக்குமதி செய்யப்படும் சீன அரிசி தரமானதா?

### அமைச்சர்கள் மழுப்பல்

கொழும்பு,ஜன.21

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள அரிசி, சேதனப் பசளையில் உற்பத்தி செய்யப்பட்டதா என்ற கேள்விக்கு, அமைச்சரவைப் பேச்சாளர்கள் மழுப்பலான பதிலைத் தெரிவித்தனர்.

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், 'சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள அரிசி சேதனப்பசளையால் உற்பத்தி செய்யப்பட்டதா?' என்று ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும, வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் இது தொடர்பில் கேட்டறிந்து தெரியப்படுத்துவோம். இறக்குமதி செய்யப்படும் அரிசி சேதனப்பசளையால் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் என்றே நாமும் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஒ-4-இ)

## அரச ஊழியர்களுக்கு ஓய்வுபெறும் வயது 65

### வர்த்தமானி வெளியீடு

கொழும்பு,ஜன.21

அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 65ஆக அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் கையொப்பத்துடன் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வருட வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுக்கு அமைவாக, அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 65 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயது 65 ஆக மாற்றியமைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின்படி, எந்தவொரு அரச ஊழியரும் 55 வயதுக்குப் பின்னர் விரும்பினால் ஓய்வு பெறலாம். 65 வயதுக்குப் பின்னரே கட்டாயம் ஓய்வு பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

## மூன்று நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளது இலங்கை

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு,ஜன.21

டொலர், நிதி மற்றும் வீழ்ச்சியடைந்துவரும் பொருளாதாரம் உள்ளிட்ட 3 நெருக்கடிகளை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கொள்கை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாடு எதிர்நோக்கும் தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்காக, ஜனாதிபதி கொள்கை விளக்கத்தை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பு மற்றும் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை ஜனாதிபதி விரிவாக விளக்கியுள்ளார் - என்றார். (ஒ-4-இ)

## ராஜிதவுக்கு எதிரான வழக்கு மார்ச் 15இல் விசாரணைக்கு

கொழும்பு,ஜன.21

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, சர்ச்சைக்குரிய வெள்ளைவான் தொடர்பில், ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி, தேர்தல் பரப்புரைக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில், கொழும்பு மேல் நீதிமன்றில் இருவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்கு விசாரணைத் திகதி அறிவிக்கப்பட்டது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"எனது வெற்றிகளின் மூலம் என்னை மதிப்பிடா தீர்கள், எத்தனை முறை நான் கீழே விழுந்து மீண்டும் எழுந்தேன் என்பதன் மூலம் மதிப்பி டுங்கள்" –நெல்சன் மண்டேலா

## யொஹானியும் இந்துகாதேவியும்...!


பாகிஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச குத்துச் சண்டைப் போட்டியில், 25 வயதுக்குட்பட்ட 50 – 55 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கம் வென்று சர்வதேச அளவில் இலங்கையின் கொடியை உயரப் பறக்கவைத்துள்ளார் இந்துகா தேவி. தந்தையை இழந்து, தாயின் அரவணைப் பில் வளர்ந்த அந்த யுவதியின் இந்தச் சாதனையால் முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமல்ல ஒட்டு மொத்த தேசமும் இன்று பெருமிதம் கொள்கின் றது. ஆனால், இந்துகாதேவிக்கான அங்கீகாரம் எந்தமட்டில் இருக்கும், அவருடைய சாதனை எவ்வளவுகாலம் நிலைத்திருக்கும், இந்த விவகா ரம் எவ்வளவு காலம் பேசுபொருளாக இருக்கும்? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் எம்மிடம் இருக்கவே செய்கின்றன. ஆனால், அவை ரசிக் கும் படியாக – பெருமைப்படும் படியாக இல்லை.

சிங்களப் பாடகி யொஹானி பாடிய, 'மெனிக்கே மஹே ஹிதே' என்ற பாடல் அண்மையில் பலரின் பாராட்டைப் பெற்றது. இலங்கைக்கு வெளியி லும் அந்தப்பாடல் பேசுபொருளானது. திரையுல கின் ஒட்டுமொத்த கவனக் குவிவையும் அந்தப் பாடல் பெற்றிருந்தது. ஜனாதிபதியும் யொஹா னியை அழைத்து அந்தப் பாடலை பாடவைத்து ரசித்தார். காணித்துண்டுகள் உட்பட பரிசில்களும் அவருக்குக் குவிந்தன. இந்தப் பரிசுகள் வழங்கு வதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையும் மனமுவந்து வழங்கியது. அந்தப் பாடலுக்கும் பாடகிக்கும் உரிய கனதியை – மரியாதையை கொடுக்கத்தான் வேண்டும். அதைத் தவிர்ப்ப தற்கோ மறுப்பதற்கோ இல்லை. ஆனால், இதே முக்கியத்துவத்தை இந்துகாதேவிக்கும் அரசாங்க மும் அமைச்சரவையும் கொடுக்குமா? என்ற கேள் விக்கான பதில்தான் இங்கு ஆராயப்பட வேண்டி யதும் – தேடப்படவேண்டியதுமாகும்.

யொஹானிக்கு எந்தவிதத்தில் குறைந்தது இந்து காதேவியின் சாதனை? இருவரும் இருவேறு துறையைச் சேர்ந்தவர்கள். ஆனால், இருவராலும் தேசம் பெருமைப்பட்டுள்ளது. இன்னும் சொல் லப்போனால் யொகானியின் பாடல் இலங்கை யைப் பிரதிநிதித்துவம் செய்த அரங்கின்மூலம் வெளிப்பட்டதொன்றல்ல. அது அவரின் தனிப் பட்ட பாடல். அவரின் தொழில், வருமானம். ஆனால், இந்துகாதேவி வென்றுதந்துள்ள தங் கம்...?

யொஹானிக்கு வழங்கப்பட்ட அந்தஸ்தை, அங் கீகாரத்தை சவாலுக்குட்படுத்துவது இந்தப் பத்தி யின் நோக்கமல்ல. ஆனால், அந்த அங்கீகாரத்தை இந்துகாதேவிக்கும் கொடுக்க வேண்டும் என்பது தான் அழுத்தம் திருத்தமான கருத்து.

இந்த உலகில் இன, மத, மொழி என்ற பேதங்க ளுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் ஏராளம் உள் ளன. விளையாட்டும் அவற்றில் ஒன்று, விளை யாட்டு என்பது உலகப்பொதுமொழி. வடக்கு – கிழக்கில் இவ்வாறான வீரர்கள், வீராங்கனைகள் இன்னுமின்னும் ஏராளமானவர்கள் உள்ளனர். அவர்களுக்கான வாய்ப்புக்களும் வளங்களும் வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. பேதங்கள் களையப்பட்டு, வாய்ப்புக்கள் வழங் கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படின் இலங்கையின் தேசியக் கொடி இன்னுமின்னும் உயரப்பறக்கும் – வேறொருதளத்தில் – வேறொரு பரிமாணத்தில் – வேறொரு கோணத்தில் அவ்வ ளவே...!.




சிங்கள - பௌத்த வாக்குகளால்

# ராஜபக்சக்களுக்கு எதிர்காலம் இல்லை

சுசில் போர்க்கொடி



கொழும்பு, ஜன. 21

**ராஜபக்சக்கள் சிங்கள - பௌத்த வாக் குகளால் மீண்டும் ஆட்சியைக் கைப் பற்றமுடியாது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

இராஜாங்க அமைச்சுப் பத வியில் இருந்து பதவி நீக்கப் பட்ட சுசில் பிரேமஜயந்தவின் எதிர்கால அரசியல் தொடர் பிலும், அரசுக்கெதிரான ஒரு கிளர்ச்சிக்குழுவை அவர் உருவாக்குவதில் முன்னிற்ப தாகவும் பல்வேறு தகவல் கள் வெளியாகிக்கொண்டி ருக்கையில்; கொழும்பு ஊடக மொன்றுக்கு அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார். (ம)

# மக்களுக்குத் தேவையானவை பிரச்சினைகளுக்குத் தீர்வுதான்

*நிலவைப் பிடிக்கும் கதைகளல்ல: கருணாதிலக கடும் காட்டம்*

கொழும்பு, ஜன. 21

நாட்டில் மக்களுக்கு உணவுப்பஞ்சம் ஏற்பட்டு அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வரிசையில் நின்று போராடிக் கொண்டுள்ள நிலையில், அதற்கான தீர்வு களை முன்வைக்காது நிலவைப் பிடிக்கும் கதைகளைக் கூறுவதுபோன்று ஜனாதிபதி யின் கொள்கை விளக்க உரை அமைந்துள் ளது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பி னர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்ற மூலாசனத் தில் அமர்ந்திருந்து ஆற்றும் உரையை அக் கிராசன உரையெனக் கூறுவோம். ஏனென் றால் அந்த உரை மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கும். அவ்வாறு ஆற்றும் உரை யில் பொறுப்புக்கூறல் மற்றும் பெறுமதி இருக்கும். ஆனால் இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் ஜனாதிபதி சபையில் உரையாற்றியுள்ளார். ஆனால் இரண்டு ஆண்டுகளில் அவர் கூறிய எதுவுமே உறு தியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. காலை ஒன்றையும் பின்னேரம் ஒன்றையும் கூறுவார். வர்த்தமானி அறிவித்தல் விடுக் கப்படும் பின்னர் அது திருத்தப்படும். இவ் வாறு எந்தவித உருப்படியான தீர்மானமும் எடுக்காது இரண்டு ஆண்டுகள் கடத்தப்பட் டுள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் சிறப்பாகச் செய்து காட்டுவேன் எனக் கூறு கின்றார்.

மார்ச் மாதத்தில் உணவுத் தட்டுப்பாடு, மின் தடை, எரிபொருள் தட்டுப்பாடு, மருந்துத் தட் டுப்பாடு ஏற்படப்போகின்றது. இதற்கு என்ன தீர்வு என்ற எதனையும் ஜனாதிபதி கூற வில்லை. இந்த நாட்டில் ஒரு வேளை உண வுக்காக கஷ்டப்படும் மக்கள் குறித்து ஒரு வார்த்தையேனும் கூறாது நிலவைப் பிடிக்கும் கதையாகவே ஜனாதிபதியில் உரை அமைந் துள்ளது - என்றார்.

(ம)

நாளை 22.01.2022 சனிக்கிழமை தை 09
சுபநேரம் : 03.35 – 05.05
ராகுகாலம் : 09.35 – 11.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களைப் பதுக்குவோருக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 21**
**யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குவோர், கட்டுப்பாட்டு விலைகளை மீறி பொருள்கள் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடைகளில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கல் மற்றும் கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் விற்கப்படாமை போன்ற பிரச்சினை நிலவுவது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நானும் நேரடியாக சில வர்த்தக நிலையங்களுக்குச் சென்று பார்த்துள்ளேன்.

பல வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்திய தாக இல்லை. எனவே இதுதொடர்பில் சகல உள்ளூராட்சி மன்றங்கள், சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஓர் அறிவித்தலை கொடுக்கவுள்ளேன்.

அதாவது கட்டுப்பாட்டு விலையை மீறி பொருள்கள் விற்பனை செய்வோர் மற்றும் பொருள்கள் பதுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களுக்கான உரிமங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப் பணிக்கவுள்ளேன்.

மேலும், வடக்கில் இனி அரச உத்தியோகத்தர்கள், பொது மக்களின் குறை நிறைகளைக் கேட்டறியும் வேலைத்திட்டம் விரைவில் உருவாக்கப்படும். வடக்கு மாகாண ஆளுநராக நான் கடமைகளைப் பொறுப்பேற்று, மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. ஒவ்வொரு நாளும் 20க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் சாதாரணமட்டப் பிரச்சினைகள் அதாவது கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள். ஆனால், அவர்களால் தீர்க்கப்படாதவிடத்து என்னிடம் வருகின்றார்கள். நான் என்னிடம் வருபவர்களைத் திருப்பி அனுப்ப முடியாது.

அவர்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். இதற்குப் பிறகு நான் ஒரு முடிவு எடுத்துள்ளேன். அதாவது அரச உத்தியோகத்தர்கள் இனிமேல் அலுவலகங்களில் மட்டும் கடமை புரியாது மக்களிடம் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்ற வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க உள்ளேன் -என்றார். (ம-7-27)



## புனரமைப்புப் பணிக்காக பஸ் நிலையம் மூடப்பட்டது

### பயணிகள் அந்தரிப்பு

சாவகச்சேரி, ஜன. 21

சாவகச்சேரி பஸ் நிலையம், புனரமைப்புப் பணிக்காக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி பஸ் நிலையத்தினூடாகச் செல்லும் அனைத்து பஸ்களும் புனரமைப்புப் பணிக்காக ஏ-9 வீதியில் நிறுத்தப்பட்டு, பயணிகளை ஏற்றி இறக்குகின்றனர்.

குறிப்பாக கொடிகாமம் நோக்கிப் பயணிப்பதற்கு முதியவர்கள், கர்ப்பிணிகள் உட்பட அனைத்துப் பயணிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி1-9)



## டெங்கு விழிப்புணர்வு மானிப்பாயில் ஆரம்பம்

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு, வடக்கு மாகாணத்தின் முதலாவது டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மானிப்பாய் பொதுச் சந்தையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக, டெங்கு விழிப்புணர்வு வாசகங்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. தொடர்ந்து எஸ். ரி.குமரனின் நெறிப்படுத்தலில், டெங்கு ஒழிப்பு சம்பந்தமான வீதி நாடகம் இடம்பெற்றது. சந்தையைச் சுற்றிய வளாகமும் சிரமதானம் செய்யப்பட்டது.

நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன், பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மு.சுலோச்சனா மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4-27)



## மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த காவலரண்களை அமைக்க முடிவு

கிளிநொச்சி, ஜன. 21

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த, காவலரண்களை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் கீழுள்ள ஆற்றுப்படுகையில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வரும் நிலையில்; மாவட்டச் செயலரின் பணிப்பில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர், மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர், கரைச்சிப் பிரதேச செயலர், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

இதன்போது, மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த இராணுவக் காவலரண்களை அமைக்கத் தீர்மானித்தனர். (ஒ-4-214)




## இறுவட்டு வெளியீடு

முல்லைத்தீவு, ஜன. 21

சுப்பையா கந்தசாமியின் நினைவாக அவரின் குடும்பத்தால் தயாரிக்கப்பட்ட "பக்தி புகழ்மாலை" என்ற இறுவட்டு நேற்று முன்தினம் வெளியீடு செய்யப்பட்டது.

மல்லாவியிலுள்ள புகழேந்தி நகர், திருவள்ளுவர் நகர் ஸ்ரீபாலவிநாயகர் ஆலயத்தின் புகழை எடுத்துக் கூறும் வகையில், நம்நாட்டுக் கலைஞர்களின் உருவாக்கத்தில் இசைக்கபி ஒலிப்பதிவுக் கலையகத்தில் பி.எஸ். விமலின் இசையமைப்பில் உருவாக்கம் பெற்றுள்ளது. (ஒ-ரி1-19)



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலின் அலங்காரத் தோரண வளைவு நுழைவாயில் திறப்பு விழா, நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ஒ-ரி1)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்: இராணுவத்தினருக்கு தடை விதியுங்கள்

யாழ்ப்பாணம், ஜன.21

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட்ட, இராணுவ அதிகாரிகளுக்கு பிரிட்டன் தடை விதிக்க வேண்டுமென்று வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய பிரிட்டன் இராஜாங்க அமைச்சரின் விம்பிள்டன் பிரபு தாரிக் அஹ்மத் மற்றும் பிரிட்டன் பிரதமரின் சிறப்புப் பிரதிநிதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை, மனித உரிமை மீறல்கள் அதிகம் நடைபெற்ற நாடு எனும் ஐக்கிய நாடுகள் சபையின் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின்போது, இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த போது, காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களை நாம் இழந்துள்ளோம். தங்களது இலங்கைப் பயணத்தின் போது, நாட்டின் ஜனாதிபதியிடம் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் கேட்கவேண்டியது கட்டாயம். நாம் கடந்த 13 வருடங்களாக எந்தவித மரியாதையும் இன்றி, துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

ஜேர்மனி சிரியாவுக்கு சர்வதேச சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு உதவி செய்ததைப் போன்று, நீதியைப் பெறுவதற்கு இங்கிலாந்து அரசு எமக்கு உதவி செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கின்றோம் -என்றுள்ளது. (ஒ-4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

12th EDITION

JITF 2022

21 22 23 ஜனவரி JANUARY
10.00AM - 8.00PM
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)
MUTTRAWELI GROUNDS (NEXT TO JAFFNA FORT)

# இன்று ஆரம்பம்



## Message from Hon Governor Northern Province

It's with great pleasure that I submit this message of felicitation on the Jaffna International Trade Fair, Organized by the LECS and CCIY. The Trade Fair (JITF), (which will be held for the 12th consecutive year is an annual flagship event of the Northern province and is organized with the prime objective of helping business entities of various industries to make inroads into the peninsula which had been long relegated as an area too risky to invest in. Through this Trade Fair we encourage entrepreneurs and established businesses to operate in an environment which is conductive for long and short term investment.

This year the ITF 2022 will see the launch of a programme targeted at the Youth and Young Adults in Jaffna, aimed at Empowering & Inspiring youth towards self-development and entrepreneurship. This event is an opportunity for all sectors to show case products, services and more so an opportunity to share expertise and experiences in the different sectors. It's further an opportunity for all stake holders to meet and dialog with key officials from the local government, public and private sectors, present your product or service alongside your competitor, Build brand awareness and strengthen your presence in the market and Network for new partnerships and trade links.

The event is known to be a multi trade affair featuring industries, products and services in the Agriculture, Hospitality, Education, Food industries, Machinery, Construction, Consumer, Electronics, and real estate sectors. The event's long-standing education pavilion "Kalvi" will also feature many higher education institutions. I take this opportunity to thank those have come forward to assist by way of sponsorships to enabling an event of this magnitude , namely Insee Cement, a stall holder for over a decade. Ruhunu Foods is the Official Food Partner for the event. Official Telecommunication Partner will be Mobitel (Pvt) Ltd. who have been part of the event for 12 consecutive years since 2010. Official Safety & Hygiene Partner is Sun Match Company (Pvt) Ltd.
I wish you every success

*Hon. Jeevan Thiagarah*



## Message from Acting Consul General of India

The Jaffna International Trade Fair (JITF) has emerged as an eminent annual forum for business and economic interaction in the Northern Province of Sri Lanka. Over the years, it has helped showcase opportunities related to trade and commerce apart from fostering greater partnerships and cooperation. The organization of 12th Edition of the JITF was eagerly anticipated in view of the success of earlier editions of JITF and I am glad to note that it is being held this year after the inadvertent interruption caused by the Covid-19 pandemic in the year 2021.

I congratulate all the organizers and participants for their effort in ensuring that the event is held this year.

I hope this will contribute towards growth and development in the Northern Province and also help support expedited economic recovery in the country.

The Consulate General of India in Jaffna will continue to support efforts for economic growth and development of the Northern Province.

It will also continue promoting greater business to business interaction and people to people ties between the Province and various States of India, including through trade and industry organisations.

I would like to convey my best wishes for the success of this event and hope that the participants will have fruitful and beneficial engagements during the Trade Fair.

*V. Ram Mahesh*



## Message from Managing Director Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with great pleasure that I extend this message for the 12th Jaffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors.

As per the statistics there is a significant increase of the visitors to the exhibition year on year which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development of infrastructure in the north and east streamlining the living conditions of the northern community.

I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality.

I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Ministry of Industry & Commerce, the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Export Development Board and all Exhibitors, Sponsors & participants.

I also thank the people of Jaffna for their continued support in making JITF a great success year after year.

*Arjun Dharmadasa*



## Message from Chief Executive Officer Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

The Northern most tip of the country, its capital will be set alight for the 12th consecutive year with the commencement of the Jaffna International Trade Fair (JITF) 2022 from the 21st to the 23rd of January 2022.

The Exhibition which has risen to a 'must attend' event by the citizens, businessman, traders and entrepreneurs of the North will be held under strict health regulations this year due to the ongoing pandemic. The event will take place outdoors at the Muttraveli Grounds Jaffna, at the heart of the peninsula.

The trade fair which comprises local stalls, caters to a diverse variety of needs and services and has been considered the single most focal point for a wide spectrum of investors and citizens.

Organizing the 12th edition of JITF ensures that the northern region is still one of Sri Lanka prime untapped markets in terms of trade and investment. This event undoubtedly is considered the most focused exhibition and Trade Fair in Jaffna. I take this opportunity to welcome all exhibitors and visitors to the beautiful city of Jaffna while thanking and wishing all our valued sponsors and exhibitors the very best at JITF.

I also wish to convey my sincere thanks and gratitude to all stakeholders who have supported us immensely in making this year's JITF a success.

*Aasim Mukthar*



## Message from Chairman Chamber of Commerce and Industries of Yarlpanam

It gives me a great pleasure to present the Chairman's message to the 12th Jaffna International Trade Fair (JITF). Since the new year set in, Chamber of Commerce and Industries Yarlpanam have taken a first to outspread numerous positive impacts on the northern province industrial activities.

One of the Sri Lanka's largest exhibition and consumer fairs called JITF has earnestly received by all parties in our nation and it has met continuous success in the past 11 years.

JITF regularly maps the most lucrative opportunities across the national market landscape in target sectors and promote our region's existing and new businesses through participation in trade shows, buyer-seller meets, international collaboration/investment opportunities and networking arrangements through overseas missions, trade & investment promotion bodies across the country.

Therefore, the expectation and participation of the 12th Jaffna International Trade Fair, being held on 21st ,22nd and 23rd of January 2022, will be prominent and magnificent.

It is true that we live in a volatility, uncertainty, complexity and ambiguity world, and nowhere has this been more apparent than the present COVID-19 pandemic. With the unprecedented disruption in global value chains, economic loss due to lockdowns across affected countries and severe restrictions on cross-border movements of professionals, COVID-19 inflicted untold damage on global trade.

There is no doubt that the pandemic has unleashed dramatic transformations in ways of doing business, and some of these changes could well be of more permanent nature. In accordance with the present situation, JITF 2022 definitely give us an interface to ensure that our businesses are not disadvantaged in their quest for global expansion. Trade fairs are the powerful marketing mediums, provide visitors with a comprehensive overview of the entire market and industry.

At this point, I request investors not only to trade end products in our regional markets, but also contribute to establish industries in northern province through create employment opportunities along with skills and knowledge transformation.

At this juncture we sincerely admit our gratitude to the exhibition organizer, Lanka Exhibition and Conference Services (LECS) for their selfless involvement towards making JITF 2020 a successful occasion.

Additionally, we acknowledge all participants of trade fair for giving us continuous boost and immense support. In further, we genuinely thank all our sponsors, media and press associates and all other government and nongovernmental bodies who lend helping hands in various modes to refine this trade fair more splendid.

As a Chairman of Chamber of Commerce and Industries Yaarlpanam, I would like to take this opportunity to thank Honourable Governor of Northern Province, His worship Mayor Municipal council Jaffna, Government agent/ district secretory, Commissioner Jaffna Municipal Council, Police and government officials for your precious support to make this trade fair an energetic one.
Thank you.

*K. Nantharuban*

MAIN SPONSOR: INSEE CEMENT | CO - SPONSOR: SLT MOBITEL | OFFICIAL PARTNERS: SAFETY & HYGIENE, FOOD, PRINT MEDIA, ELECTRONIC MEDIA | ORGANIZED BY: LECS | IN ASSOCIATION WITH | ENDORSED SUPPORTED BY | PARTNER COUNTRY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உங்கள் வியாபாரத்தின் விஸ்தீரணம் UTE CAT உடன்



2020 ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் 100 மில்லியனுக்கும் அதிக மதிப்புள்ள கட்டுமான இயந்திரங்களை விற்பனை செய்து சாதனை படைப்பதற்கு காரணமாகிய அனைத்து வட மாகாண வாடிக்கையாளர்களுக்கும் UTE நிறுவனம் தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

இம்முறையும் நடைபெறும் யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் UTE இன் காட்சிக் கூடத்திற்கு வாடிக்கையாளர்கள் மற்றும் வட மாகாண மக்கள் அனைவரையும் UTE அன்புடன் அழைக்கின்றது.

UTE இலங்கை முழுவதற்கும் நிகரற்ற பொறியியல் தீர்வுகளை வழங்குகிறது. UTE நிறுவனம் 7 தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் நம்பகமான பங்காளியாக உள்ளதோடு தொடர்ந்தும் கட்டுமான இயந்திர விற்பனையில் முன்னணியில் உள்ளது.



வட மாகாண மக்களின் நம்பிக்கையையும் நன் மதிப்பையும் வென்ற UTE நிறுவனம் எதிர்வரும் காலங்களிலும் யாழ் சர்வதேச வர்த்தகக் கண் காட்சியில் கலந்து கொள்வதுடன் வாடிக்கையாளர்களுடன் இணைந்து வடமாகாணத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை செய்ய கடமைப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DIMO
THE PERFECT PARTNER

# தொழில்நுட்ப ஜாம்பவான்களுடன் DIMO பங்குபற்றும் யாழ் வர்த்தக கண்காட்சி



யாழ் மக்களின் கனவுகளையும் அபிலாஷைகளையும் ஊக்குவிக்கும் **DIMO**, யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2021 **(JITF)** இல் பங்கேற்கின்றது. இக் கண்காட்சியில் **DIMO** தமது வர்த்தக நாமங்களின் சர்வதேச ரீதியான தொழில்நுட்ப முன்னேற்றங்களை யாழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் பங்குகொள்கின்றது. இக் கண்காட்சியில் பங்குபற்றி இச்சர்வதேச உற்பத்திகள் பற்றிய அனைத்து விபரங்களையும் அவற்றின் பயன்பாட்டையும் பிரயோகத்தையும் எமது நிபுணர்களிடமே கேட்டறிந்து கொள்ளுங்கள்.

ஜனவரி **21, 22** மற்றும் **23**ம் திகதிகளில் யாழ் முற்றவெளி மைதானத்தில் (யாழ் கோட்டைக்கு அருகில்) இடம்பெறவுள்ள யாழ் வர்த்தக கண்காட்சிக்கு வருகை தந்து **DOME 01** இல் எம்மை சந்தித்து உங்கள் தொழில்துறையை தொழில்நுட்பத்தினைக் கொண்டு மேம்படுத்துவது எவ்வாறு என்பதை அறிந்து கொள்ளுமாறு **DIMO** அன்புடன் அழைக்கின்றது.

**DIMO வழங்கும் உலகின் தலைசிறந்த வர்த்தக நாமங்களினை கண்டறிந்திடுங்கள்!**

ALLIANCE BFGoodrich BLACK+DECKER DEWALT DITEC DIMO LUMIN DIMO MARINE SOLUTIONS DIMO DIMO TECH EVOQUA FERRI
KOMATSU KSB KUMHO TIRE MICHELIN MRF Rane SCHÄFER STANLEY STIHL STILL TATA Genuine Parts WD-40

www.dimolanka.com 0112 44 97 97



SUN




## சருமத்திற்கு மென்மையானது நுளம்புகளை விரட்டுகிறது

8 மணித்தியால பாதுகாப்பு

அறிமுகமாகிறது நுளம்புகளுக்கெதிராக பாதுகாப்பினை வழங்கும் இலங்கையின் மூலிகை நுளம்பு விரட்டி. Sun Citrus மூலிகை நுளம்பு விரட்டியானது சருமத்திற்கு தீங்கான எந்தவிதமான இரசாயனங்களையும் கொண்டிராததுடன், சரும அரிப்பு மற்றும் ஒவ்வாமை போன்றவற்றையும் தவிர்க்கிறது.

இன்றே வாங்குங்கள், நுளம்புகளை விரட்டியடியுங்கள்

100%

சன் மெட்ச் தனியார் நிறுவனம்
பமுனுபொலலத்த, குண்டசாலை, கண்டி, இலங்கை. தொ.பே.: +94 81 4472555, +94 81 2420057, +94 81 2420225 பெக்ஸ்: +94 81 2420435 ஈமெயில்: soorya@sltl.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நெற்றிக்கண்ணுடன் பிறந்த கன்றுக்குட்டி

சென்னை, ஜன.21

மூன்று கண்கள் மற்றும் நான்கு நாசித் துளைகளைக் கொண்ட அபூர்வ கன்றுக்குட்டியை பசுவொன்று ஈன்றுள்ளது.

சத்தீஸ்கரின் ராஜ்னந்த்காவ்ன் மாவட்டத்தில் உள்ள நவகாவ்ன் லோதி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் வளர்த்துவந்த பசுவொன்றே இவ்வாறு அபூர்வ கன்றுக்குட்டியை ஈன்றுள்ளது. குறித்த கன்றுக்குட்டியை கடவுளின் அவதாரம் எனக் கூறி அப்பகுதி மக்கள் வழிபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## குடியரசுதின நிகழ்வில் காகித தேசியக் கொடிகள்

புதுடில்லி, ஜன.21

குடியரசு தினத்தை முன்னிட்டு, பிளாஸ்ரிக் தேசிய கொடிகளுக்குப் பதிலாக காகிதத்திலான கொடிகளின் பயன்பாட்டை பொதுமக்களிடம் ஊக்குவிக்க வேண்டுமென மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து அனைத்து மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. கலாசார, விளையாட்டு நிகழ்ச்சிகளில் காகிதத்தால் செய்யப்பட்ட தேசியக் கொடிகள் மட்டுமே பொதுமக்களால் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சி சாதகமாகும். எதிர்பாராத செலவுக்கு வாய்ப்பு உண்டு. வருமானம் திருப்தி தரும். இன்று முக்கிய நபரின் சந்திப்பு ஏற்படும். அன்போடு பழகிய ஒருவர் உங்களின் மனக் குழப்பத்தை அகற்றுவார்.

**இடபம்:** கடன் பிரச்சினை தீரும். உங்களின் ஆசை ஒன்று நிறைவேறும். வீட்டில் இதுவரை தள்ளிப்போன சுப விஷயம் இன்று முடிவாகும். பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது.

**மிதுனம்:** வாழ்வில் மகிழ்ச்சி அளிக்கும்படியான திருப்பம் வரும். மேலதிகாரிகள் உங்களுக்குப் பரிந்து பேசி நலம் அளிப்பர். இளைஞர்களுக்கு நல்ல விஷயம் நடைபெறும்.

**கடகம்:** உங்கள் முன்னேற்றத்துக்கு வித்திட்ட ஒருவரைச் சந்திக்க நேரிடும். எதையும் திட்டமிட்டு கால நேரம் தவறாமல் செயற்படுங்கள். குடும்ப சந்தோஷம் கூடுதலாகும். சேமிப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சுபச்செய்தி வந்து மகிழ் விக்கும். சரியான ஓய்வு கிடைக்காமல் சோர்வடைந்த நிலை மாறும். செலவுகள் அதிகமாகாமல் பார்த்துக்கொள்வீர்கள்.

**கன்னி:** பழைய தவறெல்லாம் தொடராதபடி கவனமாக இருப்பீர்கள். எங்கவொரு வேலையையும் கவனமுடன் செய்வது அவசியம். தொழி... வீட்டுக்குக் குடி போவீர்கள்.

**துலாம்:** குடும்பத்தில் இன்று கலகலப்பான சூழல் உருவாகும். பிறருடன் அன்பாகப் பேசுவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம், மகிழ்ச்சி தரும் செய்தி வரும். நட்பு வட்டம் விரியும். சேமிப்பில் ஆர்வம் ஏற்படும்.

**விருச்சிகம்:** இன்று மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். பேச்சு, செயற்பாடுகளில் கவனமாக இருப்பது மிகவும் நல்லது. சுபச்செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சி தரும். சருமப்பாதுகாப்பு அவசியம்.

**தனுசு:** வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். உங்களது துறையில் கடுமையாக முயற்சி செய்து வெற்றி பெறுவீர்கள். உறவினர்களை விட்டுக்கொடுக்காமல் உறுதியாக இருப்பீர்கள்.

**மகரம்:** அடுத்தவர் சுதந்திரத்தில் தலையிட வேண்டாம். புத்திக்கூர்மையால் கடினமான பணிகளைக்கூட எளிதாக முடிப்பீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வரன்கள் தேடி வரும்.

**கும்பம்:** தொழில் தொடங்குவோர் ஆலோசித்து முடிவு எடுக்கவும். பணிச்சுமை அதிகமாகலாம். பேச்சில் கவனம் தேவை. சிலருக்கு தந்தை வழி உறவினர் மூலம் உதவி கிடைக்கும்.

**மீனம்:** விரும்பிய இடத்தில் பணிபுரிய வாய்ப்பு வரலாம். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வரவு திருப்தியளிக்கும். நிலுவைப் பணிகளை செய்து முடித்து நிம்மதி காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு, நேற்றுமுன்தினம் பல நோக்கு பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.
இதன்போது, மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட கைவினைப் பொருள்கள், ஆடைகள் உட்பட பல்வேறு விதமான பொருள்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. (ஒ-ரி1-110)



# பொங்கல் விழாவும் கௌரவிப்பும்

சாவகச்சேரி, ஜன. 21
கச்சாய் - மகா வித்தியாலயத்தில் பொங்கல் விழாவும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.
கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான பொங்கல் விழாவில், 2020ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரத்தில் கலைப்பிரிவில் சித்தியடைந்த 9 மாணவிகள், பெற்றோரால் மாலை மற்றும் பதக்கம் அணிவித்து நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
அத்துடன், சித்தியடைந்த 9 மாணவிகளுள் 4 மாணவிகள் பல்கலைக்கழகத்துக்கும் தெரிவாகியுள்ளனர். பல்கலைக்கழகம் செல்லும் 4 மாணவிகளும் விருந்தினர்களால் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு சுவிஸில் வசிக்கும் பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் 25 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிப் புத்தகமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (ஒ-ரி1-159)

## முதலாம் பக்க தொடர்ச்சிகள்...

*சுகாதார....*
என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவ சேவையைச் சிறப்பாக மேற்கொள்ள 50 சுகாதாரத் தொண்டர்களின் சேவை அவசரமாகத் தேவைப்படுகின்றது.
க.பொ.த. உயர்தரம் கற்ற 25 வயதுக்குக் குறைந்த தன்னார்வலர்கள் இந்தச் சேவைக்கு விண்ணப்பிக்க முடியும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்துக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. இவர்கள் 3 மாத சேவையைப் பூர்த்தி செய்த பின்னர் அவர்களுக்கு தகுதிகாண் சான்றிதழ்கள் வழங்கப்படும். சேவையாற்ற விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளரிடம் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

*வவுனியாவில்...*
தயாரிப்பான இடியன் துப்பாக்கி ஒன்று ஓமந்தைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.
அத்துடன் ஈச்சங்குளம், தவசியாகுளத்தில் 60 மில்லிமீற்றர் எறிகணை மற்றும் கொத்துக்குண்டு ஒன்று என்பவற்றை ஈச்சங்குளம் பொலிஸார் மீட்டுள்ளனர். இவை தொடர்பான விசாரணைகள் ஓமந்தை மற்றும் ஈச்சங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-110)

# யாழ். வர்த்தகக் கண்காட்சி இறுக்கமான நடைமுறை

## மாநகர சபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம்,ஜன.21**
**யாழ்ப்பாணத்தில் வருடாந்தம் நடத்தப்படும் வர்த்தகக் கண்காட்சிக்குரிய 20 லட்சம் ரூபா நிதி, ஏற்பாட்டாளர்களால் யாழ். மாநகரசபைக்குச் செலுத்தப்படவில்லை என்று யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.
இதன்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சி தொடர்பிலும் விவாதிக்கப்பட்டது.
கண்காட்சிக்காக மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய 30 லட்சம் ரூபா இதுவரை செலுத்தப்படாதிருந்தது. அதில் 10 லட்சம் ரூபாவே செலுத்தப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் செலுத்தப்படவில்லை.
அதனால் இந்த முறை வர்த்தக கண்காட்சியில் காட்சி அறை ஒன்றின் அறவீடு குறைப்புத் தொடர்பில் மாநகரசபை இறுக்கமான நடைமுறைகளைக் கொண்டு வரவேண்டும்.
நுழைவுச் சீட்டு உள்ளிட்ட விடயங்களில் மோசடி இடம்பெறாத வகையில், கண்காணிப்பு இறுக்கமாக்கப்பட வேண்டும்.
மோசடிகள் கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பத்தில், 3 லட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட வேண்டும் என்று அமர்வில் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-4-இ)



# போக்குவரத்து குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

சாவகச்சேரி, ஜன.21
சாவகச்சேரியில் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் போக்குவரத்து குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 9 பேருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.
இதன்போது மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 9 பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஒவ்வொருவரும் தலா 40 மணிநேர சமூகப் பணிபுரிய வேண்டும் எனவும் சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
இதேவேளை, திறந்த நீதிமன்றத்தில் முகக்கவசம் அணியாது சுகாதார விதிமுறைகளை மீறி, கொரோனாத் தொற்று ஏற்படக்கூடிய முறையில் செயற்பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-20)

# கால்நடைகளை வளர்க்க இராணுவத்தினர் இடையூறு

முல்லைத்தீவு.ஜன.21
இராணுவத்தின் தலையீட்டால், கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதில் பண்ணையாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
தற்போது காலபோக நெற்செய்கை இடம்பெற்றுவருவதால், முல்லைத்தீவு ஐயன்கன்குளம் கிராமத்தில், கால்நடைகளை வளர்ப்போர், கால்நடைகளை கிராமத்தின் எல்லைப் புறப்பகுதியில் மேய்ச்சலுக்கு விடுகின்றனர்.
எனினும் ஆலங்குளம் இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் பட்டிகளை அகற்றி, கால்நடைகளை வேறிடத்துக்குக் கொண்டு செல்லுமாறும் பணிக்கின்றனர்.
இந்த விடயத்தில் பொலிஸார் தலையிட்டும் பயனில்லை.
இதனையடுத்து ஐயன்கன்குளம் கால்நடை வளர்ப்பாளர்கள் ஆலங்குளம் இராணுவப் பொறுப்பதிகாரியைச் சந்திக்கவுள்ளனர். (ஒ-4-13)



# மணிவிழா

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் ஓய்வு பெறும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் மணிவிழா, நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றது. இதன்போது, முத்துக்குமாரசாமி குமுதினி, தவமணி கிருஷ்ணன் ஆகியோர் மாலைகள் அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-ரி1-159)

# நிறுவுநர் தினம்



யாழ்ப்பாணம், ஜன. 21
வசாவிளான் மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இதன்போது, இலத்திரனியல் நூலகம், சுகாதார மேம்பாட்டுப்பிரிவு, புனரமைக்கப்பட்ட ஆ.சி. நடராஜா மண்டபம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன.
அத்துடன், வாசகன்4 என்ற நூலக சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. (ஒ-ரி1)

# கிளி.பொதுநூலகத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு



கரைச்சி பிரதேசசபையின் நிதிஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள கிளிநொச்சி பொது நூலகத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இந்திய பதில் துணைத் தூதுவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலை அதிபர்கள், கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பணி நிலை வெற்றிடம்

கிளிநொச்சி ஜெயந்திநகரில் இயங்கிவரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு கணக்காளர் மற்றும் சமையலாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. பின்வரும் தகுதிகளையுடையோர் விண்ணப்பிக்க முடியும்.

**கணக்காளர் பதவி**

1. இலங்கை கணக்காளர் சேவையில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள் அல்லது
2. சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்கள் போன்றவைகளில் கணக்காளராக கடமையாற்றியவர்கள்

* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

**சமையலாளர் பதவி**

1. சமையல் தொடர்பான முன் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
2. வயதெல்லை 30-60 இற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்
3. நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்
4. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையோர் தங்கள் சுயவிபரக்கோவையினை 05.02.2022 இற்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அனுப்பவேண்டிய முகவரி **தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

தொடர்புகளுக்கு
**077 324 0950**
**021 492 3118**

(cr.37393) (2.6)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## சதாசிவம் தெட்சணாமூர்த்தி

(ஓய்வுபெற்ற முதலியார்)



**தோற்றம்** 16.08.1947 **மறைவு** 30.01.2013

**திதி: சங்கடஹரசதுர்த்தி**

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!

விண்ணுலகம் சென்று இன்று ஒன்பது ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்கா நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கஜபதி செட்டிலேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

**மனைவி - சிவயோகமணி**

(cs.42340) (2)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

**தோற்றம்** 04 . 11 . 1945



**மறைவு** 24 . 12 . 2021

கடந்த 24.12.2021 வெள்ளிக்கிழமை அல்லாரை அறுகம்புல விநாயகன் தாழ்ழடைந்த எமது குடும்பத் தலைவர்

## திரு. நாகநாதி மகாலிங்கம்

**(ஓய்வுநிலை இ.போ.ச. நடத்துனர்)**


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.01.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிரியைகள் நாளை மறுதினம் (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம். தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும். தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி தனபாலசிங்கம்



பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தனபாலசிங்கம் 18.01.2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மாவின் அன்புப் புதல்வனும். லில்லிமலரின் அன்புக் கணவரும். தங்கரத்தினம் (அமரர்). தவனாயகம் (அமரர்). செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும். ஜெகதீஸ்வரன். ஜெயகதீஸ்வரி. ஜெயவதனி. ஜெய மாலா. ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும். புஸ்பமாலா. திருக்கேதீஸ்வரன். தயாபரன் (கண்ணன்). சதீஸ்குமார் ஆகியோரின் மாமாவும். ஜெனுசன். ஜெனுக்கா. திவ்யா. சிறியாடெசானா. டெனுக்கா டெபோறா. மதுசன். மதுசா. யதுசன். அக்சயா. அப்சறா ஆகியோரின் பேரனும். அன்சிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.01.2022) திங்கட்கிழமை கனடாவில் நடைபெற உள்ளது. இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: **மருமகன் (கண்ணன்)**
**மகள் (மாலா), பிள்ளைகள்.**
**077 051 9031**

**சிறுப்பிட்டி வடக்கு,**
**நீர்வேலி.**

(cs.1176) (2)

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 07 . 10 . 1934



**இறப்பு** 13 . 01 . 2022

## கந்தவனம் பாலசிங்கம்

(முகாமையாளர் - பாலா அபிவிருத்தி நிறுவனம் (பொட்ஸ்வானா)

யாழ்ப்பாணம். கல்வியங்காடு நல்லூர் சந்தையடியைப் பிறப்பிடமாகவும். தென் ஆபிரிக்கா. பொட்ஸ்வானா. பிரித்தானியா. லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தவனம் பாலசிங்கம் கடந்த (13.01.2022) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற விஜயதேவி (உதவிமுகாமையாளர் - பாலா அபிவிருத்தி நிறுவனம் - பொட்ஸ்வானா) அவர்களின் அன்புக் கணவரும். விஜயபாலா (கனடா). தேவபாலா. ஜெயபாலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும். தருமலிங்கம் (லண்டன்) அவர்களின் சகலனும். உமா. உஷா (லண்டன்) ஆகியோரின் பெரியப் பாவும். கலைவாணி (கனடா). கமலா. ஜொன். மரினோ (லண்டன்) ஆகியோரின் மாமனாரும். பிறிந்தா. பிறிந்தன். டிலன். லியா. ரேகா. தனிஷா. அரன். அடம் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும். கனடாவைச் சேர்ந்த சண்முகநாதன் (மணி). சண்முகலிங்கம் (பூராசா). மல்லிகாதேவி (மல்லி). கமலாதேவி (கிளி). மிகுந்தலாதேவி (குஞ்சு). சுசிலாதேவி (புனிதம் - டென்மார்க்). மதனதேவி (மதனம் - இலங்கை). பிரான்ஸைச் சேர்ந்த விபுலானந்தன். கணேசமணி. பரராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்ற காங்கேயன் மற்றும் லலிதாதேவி. விஜயராணி. நிற்கந்தா (காந்தி). விமலாதேவி (இலங்கை). இராசம்மா. யோகேஸ்வரி. காலஞ்சென்றவர்களான தங்கவேல்முதலி. நடராஜா. கார்த்திகேசு. எலிசபெத் (எலிசா). தவராஜா மற்றும் காமினி (தேவகி). கமலாம்பிகை. கண்ணபிரான் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2022) வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**செ.நிற்கந்தா (காந்தி - மைத்துனர்)**

(cs1182) (3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கல் விழா

கிளிநொச்சி. ஜன.21

கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தரம் 6 முதல் க.பொ.த. உயர்தரம் வரையான ஒவ்வொரு வகுப்புக்களையும் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தமது வகுப்புக்களின் முன்னால் தனித்தனியாக பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தினர்.

(சு-159)


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குப்புசாமி ஞானசேகரம்

(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்)

தோற்றம் 27.09.1946

மறைவு 10.02.2012

திதி: அபரபக்க திருதியை

அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
வழிகாட்டிய எம் தெய்வத்திற்கு
பத்தாவது ஆண்டு நிறைவுதனில் அஞ்சலிகள் பல....

"சந்திர வாசா"
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்

(cs.42349) (2.6)



# மரண அறிவித்தல்

## நல்லதம்பி தங்கராசா

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தங்கராசா நேற்று (20.01.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லையம்பலம் இந்திராணி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம், சாவித்திரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேஸ்வரி செல்வநாயகம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், லதா (துளசி-ஆசிரியை யா/ஆனைக் கோட்டை றோ.க.த பாடசாலை), வாசுகி (ஆசிரியை - வவு/யங்கராவூர் அ.த.க பாடசாலை), யசோ (ஆசிரியை - ஊர்காவற்றுறை றோ.க.த ஆண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவகன் (பிரதேச செயலகம் - மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு), பிரதாபன், சந்திர பாலன் (சாரதி - இலங்கை போக்குவரத்து சபை, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துஷானி, சதுஷன், லதுஷன், விதுஷனன், அபிநயன், தட்ஷா, கிஷாரா, டினுஷன், சுபஸ்ரீ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2022) வெள்ளிக்கிழமை காலை 08 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.



# நீங்கா நினைவில்

20ஆம் ஆண்டு | 26ஆம் ஆண்டு



மலர்வு 27.04.1938

உதிர்வு 01.02.2002

அமரர் வெ.வேலு
(கந்தையா)
(ஓய்வு பெற்ற மின் கம்பி இணைப்பாளர்)

திதி: 21.01.2022



அன்னை மடியில் 21.02.1977

அமலன் அடியில் 13.06.1996

செல்வன் வேலு சனகன்
(முன்னாள் மாணவன்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும்
நினைவுகளோடு கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 07 . 1996



இறப்பு 17 . 01 . 2022

## ஈஸ்வரன் சௌமியா

சுவிஸைப் பிறப்பிடமாகவும். இலங்கையை வதிவிடமாகவும் கொண்ட ஈஸ்வரன் சௌமியா அவர்கள் 17-01-2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார். காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் தங்கமணி தம்பதிகள். காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் இராசம்மா தம்பதிகளின் அன்புப் பேத்தியும். ஈஸ்வரன் தேன்மொழி(அமுதா) தம்பதிகளின் பாசமிகு இளைய மகளும்.பிரவீணா அவர்களின் செல்லத் தங்கச்சியும்.யோகேஸ்வரன்- மங்கையற்கரசி. மகேஸ்வரன்- வனிதா. பரமேஸ்வரன்- ஜெயகௌரி. சிவநேஸ்வரன்- சுபாஜினி மற்றும் காலஞ்சென்ற சங்கரலிங்கம்- நாகேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும்.மனோகரன்- கலாதேவி. காலஞ்சென்ற வாசுதேவன்- புவனேஸ்வரி. ரங்கநாதன்- விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும்.வசந்தராசன்- யாழினி. தினேஸ்- சர்மிளா. தவக்குமாரன்- சுபரேகா. லாவண்ஜன்(கண்ணன்). ராஜன்- பிரதுஷா. செந்தூரன். கேதீஸ்வரன். மிதுநேசன். நிரோஸ். யாபேஸ். தவரூபன். கஸ்தூரி. சுபனேசன். சுகுனேசன் ஆகியோரின் பாசமிகு உடன் பிறவாச் சகோதரியும்.ஜீவிந்தன். தினேஸ். பிரியந். தர்சிகா. நிரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனியும்.அஸ்வின். அஸ்விகா. ஆதிகா. ராகவி ஆகியோரின் பாசமிகு குட்டி சித்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22-01- 2022 சனிக்கிழமை முதல் 23-01-2022 ஞாயிற்றுக்கிழமை வரை Jayaratne Funeral Directors (Pvt) Ltd 2B Elvitigala Mawatha, Colombo- 08, Sri Lanka எனும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் ந.ப 12:00 மணிமுதல் பி.ப 02:00 மணியளவில் Kanatte Cemetery Borella எனும் முகவரியில் இறுதிக்கிரியை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஈஸ்வரன் - தந்தை : +94 77 139 9229
வீனு - சகோதரி : +94 77 260 8206
சுகந்தன் - உறவினர்: +94 777 516911
நாகேஸ்வரி - பெரியம்மா : +14166091794
கண்ணன் - சகோதரன் : +1416890 7331

தகவல்:
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 10 . 1939



மறைவு 20 . 01 . 2022

## திருமதி நடராசா நல்லம்மா (மனேச்சர் அக்கா)

காரைநகர், களபூமி, பொன்னாவளையை பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பு,7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா நல்லம்மா (மனேச்சர் அக்கா) நேற்று வியாழக்கிழமை காலை (20/01/2022) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு-பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசு-நடராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு (பேப்பர்) கந்தையா (C.T.B) ஆகியேரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் சந்திரவதனா, திருப்பதி, சற்குணராசா, சோதிஸ்வரன் ஆகியேரின் பாசமிகு தாயாரும், விஜயகுமார், சந்திரவதனா, கீதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், யசேந்தன், விதுஷன், சிந்துயன், தமிழிகை, தயானி, பிரதீப், பிருத்திவி, பிரகன், பிரகலன், மயூரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (21.01.2022) வெள்ளிகிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
சந்திரவதனா:-0094773748555
திருப்பதி:-0094763085963
சற்குணராசா:-0033658348231
சோதிஸ்வரன்:-0016479604599


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாண வர்களுக்கு, கணிதப் போட்டியும், வாசிப்பு முகாமும் அண்மையில் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிபர் திருமதி ல.முகுந்தன் பரிசில் களை வழங்கினார்.

(ய-4-9)

## காணி விற்பனைக்கு

கரந்தன் கேணியடிப் பகுதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (பரப்பு 1500000/=). தரகர் தேவையில்லை

தொடர்பு: 077 009 4847

## A/L பௌதிகவியல்

**M.KURUNANITHY B.Sc (Hons)**
**English and Tamil Medium**

- 2023 A/L (Eng) SAT,SUN, 6.00A.M
- 2023 A/L (Tam) SAT,SUN, 7.30A.M
- 2022 A/L (Tam) SAT,SUN, 9.45A.M
- 2022 A/L (Eng) SAT,SUN, 5.00 P.M

**NEW Science Hall** அருகில்

ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படுகிறது

077 618 3064

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள Decon கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் சாரதி தேவை. (ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வோர் விரும்பத்தக்கது).

தொடர்பு: 077 777 0969

## வேலையாள்கள் தேவை

இயக்கச்சியில் சிவபூமி நாய்கள் சரணாலயத்தில் நாய்களை அன்பாகப் பராமரிக்கக்கூடிய வேலையாள்கள் தேவை. குடும்பமாக வசிப்பதற்கு இருப்பிடம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: **021 222 7938**

**சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.**

## முதியோர்க்கான விண்ணப்பம்

**சிவபூமி முதியோர் ஆச்சிரமம் கீரிமலை**
**உதவிகள் அற்ற முதியோர்கள் பராமரிக்கப்படுபவர்**

- அறுபது வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக் கலாம்.

தொடர்புகளுக்கு: **021 222 7938**

**சிவபூமி முதியோர் ஆச்சிரமம், கீரிமலை.** (cs.1178) 2.6)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 17.07.1943 | மறைவு 20.01.2022



தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கி. பிரதீபா அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சரஸ்வதி கிருஷ்ணபிள்ளை**

அவர்கள் 2022.01.20 அன்று இறைபத மடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின் றோம்.

**உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர், பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்கள், தென்மராட்சி கல்வி வலயம்.** (CR7138) 1-6

## கண்ணீர் அஞ்சலி


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியற் துறையின் சுகாதார சேவைத்தொழிலாளி

திரு.ஜெ. **கஜேந்திரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு. கந்தையா ஜெயந்திரன்**

அவர்கள் 20.01.2022 அன்று இறைபதமெய்திவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,**
**கணித புள்ளிவிபரவியற் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (cs.42346) (2.6)



## வரலாற்றுத் தொன்மை வாய்ந்த கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீசுவரர் சிவாலய புனராவர்த்தன ஸப்ததச (17 குண்ட) பக்ஷ பிரதிஷ்டா மகாகும்பாபிசேக பெருஞ்சாந்திப் பெருவிழா - 2022

சிவன் அடியார்களே!

நிகழும் மங்கலகரமான பிலவ வருடம் தைத்திங்கள் 10ஆம் நாள் 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை ஷஷ்டி திதியும். அத்த நட்சத்திரமும். சித்த யோகமும் கூடிய காலை 10.32 மணி முதல் 11.22 மணி வரையுள்ள மீனலக்கின நல்வேளையில் உருத்திரபுரநாயகி சமேத உருத்திரபுரீசுவரருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேக (குடமுழுக்கு) வைபவம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் அடியவர்கள் ஆசார சீலர்களாகவும், தற்கால சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகை தந்து மகாகும்பாபிசேக குடமுழுக்கு வைபவத்தைக் கண்ணாரக்கண்டு எம்பெருமான் திருவருளோடு பேரானந்தப் பெருவாழ்வு பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக!

**திருப்பணிக்கும், கும்பாபிஷேகத்திற்கும் நிதியுதவி, சரீர உதவி, பொருளுதவி புரிந்து ஒத்துழைக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.**

**நன்றி**

எண்ணெய்க்காப்பு
22.01.2022
சனிக்கிழமை

மகாகும்பாபிசேகம்
23.01.2022
ஞாயிற்றுக்கிழமை

**வங்கி கணக்கு இலக்கம்**
**உருத்திரபுரீசுவரர் ஆலயம்**
**048100160098867**
**மக்கள் வங்கி நடைமுறைக்கணக்கு, கிளிநொச்சி கிளை.**

**ஆலய பரிபாலன சபையினர்**
**உருத்திரபுரீசுவரர் சிவாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழருக்கு...

இவ்வாறு தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கடன் மற்றும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு அத்தியாவசிய மற்றும் எரிபொருள் இறக்குமதிக்காக இந்திய அரசு கடனுதவியை வழங்கியுள்ளது. இந்திய அரசின் இந்த முடிவு இராஜதந்திர நடவடிக்கை என்றாலும், இலங்கை அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதற்கான சிறந்த வாய்ப்பாகவும் இந்தியா இதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

சீனா உள்ளிட்ட நாடுகளிடம் இருந்து வாங்கிய கடன்களைச் செலுத்த முடியாது தவித்துக் கொண்டிருக்கும் இலங்கை, தற்போது திவால் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. இலங்கை நிதியமைச்சரின் கோரிக்கைக்கு அமைய இந்தியா, இலங்கைக்குக் கடனுதவி வழங்கியிருக்கின்றது. எதிர்காலத்தில் இன்னமும் கடனுதவிகள் வழங்கப்படலாம்.

சீனா பக்கம் சாயும் இலங்கையை இந்தியா பக்கம் திருப்பும் நடவடிக்கையாக இதைப் பார்க்கலாம். ஆனால், கச்சதீவு உள்ளிட்ட நிலப்பரப்பையும், கோடிக் கணக்கணக்கான நிதியுதவியையும் பெற்ற இலங்கை பல்வேறு தருணங்களில் இந்தியாவுக்குத் துரோகமே செய்திருக்கின்றது. இந்தமுறையும் இந்தியாவின் உதவியைப் பெற்று இந்தியாவுக்கு ஆதரவாக இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஈழத் தமிழர்கள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இந்தியாவுக்கு ஆதரவாக இருந்துள்ளனர். எதிர்காலத்திலும் அவர்களே இந்தியாவுக்கு ஆதரவாக இருப்பார்கள். அதனால்தான் அவர்களை வளைக்கு முயற்சிகள் சீனாவால் அண்மைக்காலங்களில் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கைக்குக் கடன்கள் வழங்கும் அதேநேரம், ஈழத்தமிழர்களை அரசியல் ரீதியாக வலுப்படுத்துவதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அநீதிகளை இந்தியா வேடிக்கை பார்க்கக்கூடாது. '13'ஆவது அரசமைப்புத்திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டியது இந்தியாவின் கடமையும், பொறுப்பும் ஆகும். '13'ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிரத் தயார் என்று ராஜபக்சவினர் வாக்குறுதி அளித்திருந்தனர். அந்த வாக்குறுதி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரத்தையும், நீதியையும் வென்றெடுத்துக் தர வேண்டும் என்று கோருகின்றோம்- என்றுள்ளது. (எ-இ)

## திடீர்த் தீ...

வரப்பட்டபோதும், விருந்தகத்தின் பெரும் பகுதி எரிந்து அழிந்துள்ளது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் வெடிப்புச் சத்தங்கள் கேட்டு எழுந்த அயலவர்கள், மதுபானசாலை விருந்த கத்தில் தீப் பரவல் ஏற்பட்டுள்ளதை அவதானித்தனர். அவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

பெரும் போராட்டத்தின் பின்னர் நேற்றுக் காலை 7 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆயினும் மதுபானசாலை விருந்தகத்தின் பெரும்பகுதி தீயால் அழிந்துள்ளது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(எ-110)

## இராமேஸ்வரம்...

தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் படகுமீது இலங்கைக் கடற்படையினரின் படகு மோதியது என்றும், அதில் அந்தப் படகு கவிழ்ந்தது என்றும்தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளர். அந்தப் படகில் இருந்த 7 மீனவர்கள் கடலில் மூழ்கிய நிலையில், சக மீனவர்களால் அவர்கள் காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

## எதிர்ப்பு...

திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறிவுரை கூறியுள்ளது அரச பங்காளிக்கட்சியானஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று 2ஆவது நாளாக நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர இந்த அழைப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எனக்கு முன்னர் உரையாற்றிய உறுப்பினர் (நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்), தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை எனவும், கவனிப்புகள் இல்லை என்ற தொனியிலேயே கருத்துகளை முன்வைத்திருந்தார். கொள்கை விளக்க உரையில் என்ன இருந்தாலும், சொல்லை விடவும் செயல்தான் சிறந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு , அனைத்து இன மக்களையும் அரவணைத்து ஒரு நாடாக சவால்களை எதிர்கொள்வதற்கே ஜனாதிபதி தலைமையிலான அரசு எதிர்பார்க்கின்றது. அத்துடன், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமும் ஜனாதிபதியிடம் இருக்கின்றது. எனவே, அந்த நடவடிக்கைக்கு நீங்கள் (கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்) ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதுவே முக்கியத்துவம் மிக்கதாக இருக்கின்றது.

ஆட்சியில் இருக்கும் அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை விமர்சித்துக்கொண்டிருப்பதால் நாடு என்ற அடிப்படையில் முன்னோக்கி செல்ல முடியாது.

நீங்கள் பிரதிநிதித்துவப்ப டுத்தும் மக்களுக்கும் அதனால் எவ்வித நன்மையும் கிடைக்காது என்பதை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

மஹிந்த ராஜபக்ச ஆட்சிகாலத்தில் வடக்கு, கிழக்குக்கென தனியான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நீங்கள் (கூட்டமைப்பினர்) தான் நிகுறாவிட்டாலும் நிகழ்வு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போதுகூட அனைத்து இன மக்களுக்கும் சேவைகள் வழங்கப்படுகின்றன. எனவே, சரியான விடயங்களை பாராட்டுங்கள். தவறுகள் இருந்தால் விமர்சனங்களை முன்வையுங்கள். அது உங்கள் கடமை- என்றார். (எ-44)

## ஐஸ் வைத்திருந்த...

டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஐஸ் போதைப்பொருள் தலைமன்னார், பாக்கு நீரிணை ஊடாக கடத்திவரப்பட்டிருக்கலாம் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 485 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் தலைமன்னார் கடற்கரையில் வெளிக்களப் படகு ஒன்றைக் கடற்படையினர் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட்டபோதே போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேநபர் தலைமன்னாரைச் சேர்ந்தவர் என்று தெரிவித்த பொலிஸார், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவித்தனர். (எ-60)

## அத்துமீறிய...

பாக முற்பகல் 9.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்று காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் அண்மைய நாள்களாக அதிகரித்துள்ளது என்றும், காரைநகரில் உள்ள 10 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து , காரைநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் என்பவற்றின் ஆதரவுடன் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-125)

## எரிந்த...

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிகண்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. நடராசா பரமேஸ்வரி (வயது 68) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தனித்து வாழ்ந்த நிலையில் நேற்றுக்காலை வீட்டில் எரிந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-125)

## இன்று....

வையாக நடத்தப்படுகின்றது.

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள் தங்கள் உற்பத்திகளை வடக்கு மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கான களமாக இந்தக் கண்காட்சி அமையும். அனைத்து மக்களும் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெற வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளத்துடன் இணைந்து எல்.ஈ.சி.எஸ். அமைப்பு கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் என்பன கண்காட்சிக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன. (எ-இ)

## கடை உடைத்து...

பணம்மற்றும்தொலை பேசி மீள்நிரப்பு அட்டைகள் திருடப்பட்டுள்ளன என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொல்புரம் மடத்துப்பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக உள்ள கடை ஒன்றிலேயே திருட்டு நடந்துள்ளது. நேற்றுக் காலை கடையைத் திறந்த உரிமையாளர் தேவையின் நிமித்தம் கடையைப் பூட்டிவிட்டுச் சென்று மதியம் திரும்பி வந்தபோது, கடை உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடையில் இருந்த 25 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் என்பன திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-125)

## வீதி விடுவிப்பு...

நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் போன்றோர் பொய்யான பரப்புரை செய்து மக்களை ஏமாற்றக்கூடாது.

இவ்வாறு வலி.வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு செல்லும் கட்டுவன் - மயிலிட்டி வீதி விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கோ, உள்ளூராட்சி மன்றத்துக்கோ, பிரதேச செயலகத்துக்கோ எந்த வித அறிவிப்பையும் செய்யாமல் இராணுவத்தினரின் உதவியுடன் அத்துமீறி மக்களுடைய காணி ஊடாக வீதியை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இராணுவத்தினர் தனியார் காணி ஊடாக வீதியை அமைக்க முற்படுவதால் 9 பொதுமக்களுக்குச் சொந்தமான ஏறத்தாழ 4 ஏக்கர் விவசாய நிலப்பகுதி துண்டாடப்படுகிறது.

ஊடகங்கள் வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தங்களுடைய முயற்சியால் இந்த வீதி விடுவிக்கப்படுகின்றது என்று தெரிவித்திருந்தார். இது பொய்யான செய்தி. மக்கள் காணியூடாக வீதி அமைத்து விட்டு வீதியைத் திறந்து விட்டேன் என பொய்ப் பரப்புரை செய்து மக்களை ஏமாற்றக்கூடாது- என்றார்.

அதேவேளை, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்லும் வீதியில், இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் 400 மீற்றர் நீளமான வீதி விடுவிக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதியில் இராணுவத்தினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்குச் செல்லும் கட்டுவன் -மயிலிட்டி வீதியில் 400 மீற்றர் நீளமான வீதி இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த வீதி தொடர்பில் சர்ச்சைகள் கிளம்பியுள்ள நிலையில் அந்தப் பகுதியில் வீதி அமைக்கும் பணிகளுக்கான செப்பனிடலை இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். அந்தப் பகுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு செல்வோரை இராணுவத்தினரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைக்கு உட்படுத்துகின்றனர். அங்கு செல்வோரின் வாகன இலக்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன-என்றார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியத்தை தேவையேற்படின் நாடுவோம்!

*அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 21
சர்வதேச நாணய நிதியத்தை முழுமையாகப் புறக்கணிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. தேவைக்கு ஏற்ப சர்வதேச நாணய நிதியத்தை நாடலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சரவையிலோ அல்லது நிதி அமைச்சிலோ சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பில் எந்தவிதத் தீர்மானமும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

ஆனால் 1950ஆம் ஆண்டில் நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடாக இணைந்து கொண்டதையடுத்து, 16 சந்தர்ப்பங்களில் உதவிகளைப் பெற்றுள்ளோம்.

இறுதியாக 2016ஆம் ஆண்டில் 1.1 பில்லியன் டொலரைப் பெற்றுள்ளோம். போர் தீவிரமடைந்த 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2.5 பில்லியன் டொலரை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுள்ளோம். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகூடிய டொலர் உதவி இது வாகும். எனவே சர்வதேச நாணய நிதியம் எமக்கு தேவையற்ற ஒரு நிறுவனம் என்று கூறுவது சிறந்ததல்ல. இலங்கை அதன் அங்கத்துவ நாடாகும். வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் நம்பிக்கையை சிதைவடையச் செய்யவில்லை. வரலாற்றுடன் ஒப்புநோக்கி தீர்மானங்களை எடுப்போம் - என்றார். (ம)

# தீ மிதிப்பில் பங்கேற்ற இளம்தாய் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.21
கொழும்பில் உள்ள ஆலயம் ஒன்றில் நடந்த தீ மிதிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட இளம் தாய் ஒருவர் தீக் காயங்களால் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த அக்குருவிட்ட ஆராச்சிகே இரேஷா மதுரங்கனி (வயது-26) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். இவர் 10 வயதுக் குழந்தையின் தாய் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 14ஆம் திகதி இரவு தீ மிதிப்பு நிகழ்வில் கலந்து கொண்ட இவருக்கு கால்களில் தீக்காயம் ஏற்பட்டது என்றும், தீக்காயங்களுக்குச் சிகிச்சை பெறாதிருந்த அவர், மறுநாள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## 'காங்கேசன்முரசு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.21
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, காங்கேசன்துறை பொது நூலகம் இந்த ஆண்டும் "காங்கேசன்முரசு 2" இதழை வெளியிடவுள்ளது. "காங்கேசன்முரசு 2 இதழ்" வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை பொது நூலகத்தில் வலி.வடக்கு பிரதேச தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# கடலாமையுடன் கைதானவருக்குப் பிணை

கிளிநொச்சி.ஜன.21
கடலாமையொன்றுடன் கைது செய்யப்பட்டவர், இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முழங்காவில், நொச்சிமுனையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வனவளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபர் வனவளத்திணைக்களத்தினரால், கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை பிணையில் விடுவித்த நீதிவான், எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். குறித்த ஆமையை மிருக வைத்தியரின் பரிசோதனையின் பின்பு கடலில் விடுமாறு உத்தரவிட்டார். ஆமை பரிசோதனையின் பின்பு மருதங்கேணி, தாளையடி கடலில் விடப்பட்டது. (ஒ-4,113)



# பிரதமர் அலுவலகம் திறப்பு

கொழும்பு,ஜன.21
புனரமைக்கப்பட்ட 'சிறிமதீபாய' பிரதமர் அலுவலகம் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரால் நேற்றுத் திறக்கப்பட்டது.

நினைவுக் கல்வெட்டை திரைநீக்கம் செய்த ஜனாதிபதி, அலுவலக வளாகத்திலுள்ள புத்தர் சிலைக்கு பூஜை செய்த பின்னர் கடமைகளை ஆரம்பித்தார்.

அலுவலகத்தின் கடமைகளை ஆரம்பிப்பதை முன்னிட்டு, தபால் அட்டையும், நினைவு முத்திரையும் வெளியிடப்பட்டது.

'சிறிமதீபாய' வரலாறு பற்றிய தகவல்கள் மற்றும் ஒளிப்படங்கள் அடங்கிய நூல், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்னவால், ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

100 வருடங்களுக்கு மேல் பழமையான 'சிறிமதீ பாய' 44 வருடங்களின் பின்னர் அதன் பழைய தோற்றத்துக்கே முழுமையாகப் புனரமைக்கப் பட்டுள்ளது. (ஒ-4,இ)


## விரைவு பொதிகள் சேவை

DHL வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் சேவை 3-5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன
**Lanka Cargo Worldwide Experess**
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**076 283 2397**
(பணியாளர்கள் தேவை)
(CS 1173) 1-6

## வேலைக்கு ஆள் தேவை

கொக்குவிலில் இயங்கும் தளபாட விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
(CS 1189) 1-6
**074 210 4820**

## வாகனங்கள் தேவை

தனியார் நிறுவனத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வீட்டுத் தளபாடங்கள் ஏற்றிச் செல்வதற்கு பட்டா அல்லது சுப்பர் ஏசி போன்ற வாகனங்கள் தேவை.
(cs 1175) (2.6)
**077 732 4117, 076 399 7535**

## வேலையாள்கள் தேவை

யாழில் இயங்கும் பலசரக்கு மொத்த வியாபார நிலையத்துக்கு
• மனேஜர் • Bill Clerk
(cs423.48) (2.6)
**076 009 4946**

## ஆண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பிஸ்கற் உற்பத்திக்கு ஆண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18-40 வரை. வேலை நேரம் காலை 7.30 மணி - 6.00 மணிவரை.
மாத வேதனமாக 25,000/= தொடக்கம் 45,000/= வரை வழங்கப்படும்.
தொடர்பு:- **077 311 2250**
(CS 1184 A) 1-6

## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18-30 வரை. வேலை நேரம் காலை 7.30 மணி - 5.00 மணிவரை.
மாத வேதனமாக 17,000/= - 25,000/= வரை வழங்கப்படும்.
**074 049 0003**
(CS 1184 B) 1-6

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 12 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல்.
1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்.
**077 2880 152, 077 911 6983**
(CS 1157) 1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: **077 814 7389, 077 614 7333**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு கண்ணகை அம்மன் கோவில் வீதியில், 13 பரப்புக் காணி புதிய வீட்டுடன் நல்ல தண்ணீர் கட்டு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
A-32 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
முற்றிலும் பயன்தரும் 50 தென்னைகள் உள்ளன.
3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. தரகர் தேவையில்லை.
தொடர்பு: **077 1178 578, 077 8147 389**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.